முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.21.01.2026

O.S. No.93/2015

வா,சா-1 சூர்யா

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

இந்த வழக்கு எனது அப்பா தான் தாக்கல் செய்தார் என்றால் சரி. வழக்கு சொத்தானது எனது அப்பாவின் சுயசம்பாத்திய சொத்து இல்லைஎன்றால் சரி .எனது தாத்தாவின் சொத்து அவர் மூலம் எனது அப்பாவிற்கு வந்தது. எனது அப்பாவின் உடன் பிறந்த சகோதரிகள் ராஜம்மாள், வேலம்மாள், சக்கரம்மாள் ஆகும் என்றால் சரி. எனது அப்பாவின் மூத்த சகோதரி ராஜம்மாள் இந்த வழக்கின் 1ம்பிரதி என்றால் சரி. எனது அப்பாவின் உடன் பிறந்த மற்ற சகோதரிகள் தான் இந்த வழக்கின் 5 முதல் 12 வரையிலான பிரதிகள் என்றால் சரி.

இந்த வழக்கின் 1ம் பிரதியின் மக்கள் 2 முதல் 4 பிரதிகள் என்றால் சரி. இந்த வழக்கு சொத்து பூர்விக சொத்து என்பதால் வழக்கு சொத்தில் எனது அப்பாவுடன் பிறந்த சகோதரிகளுக்கு சரிசமமாக பங்கு உண்டு என்றால் சரி. எனது நிருபண வாக்குமூலத்தில் 7 வது பக்கத்தில் எனது அப்பாவுடன் உடன் பிறந்த சகோதரிகளுக்கு சரிபாகமாக இல்லாமல் சிறிய பாகமாக சொத்து உள்ளது எதன் அடிப்படையில் சொல்லுகிறேன் என்றால் நான் அவ்வாறு சொல்லவே இல்லை.எனது அப்பாவிற்கு தெரியாமல் எனது அப்பாவுடன் பிறந்த சகோதரிகள் ஏற்படுத்திய ஆவணங்களை ரத்து செய்ய மட்டுமே கேட்டுள்ளேன் , அதில் வாக்கரால் பாகம் ஏற்பட்டுள்ளதாக பொய்யான சங்கதிகள் சொல்லப்பட்டுள்ளது.

எனது நிருபண வாக்குமூலத்தின் படி வாதி மற்றும் பிரதிவாதிகள் அனைவருக்கும் வழக்கு சொத்தில் உரிமை இருப்பதை ஒப்பு கொண்டுள்ளேன் என்றால் சரி. எனக்கு தற்போதைய வயது 32 ஆகும். எனது அத்தைகள் ராஜம்மாள், சக்கரம்மாள் , வேலம்மாள்

ஆகியோருக்கு எப்போது திருமணம் நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது அப்பாவின் திருமணத்திற்கு முன்பாகவே எனது அத்தைகளுக்கு திருமணம் நடந்தது. எனது அப்பாவின் திருமணம் 1984 ஆகும்.

எனது அத்தைகளுக்கு திருமணத்தின்போது எவ்வளவு சீர், நகை, நிலம் எழுதி கொடுத்து திருமணம் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது நிருபண வாக்குமூலத்தின் படி வழக்கு சொத்தின் மதிப்பு 1 கோடி வரை பெரும் என்றால் சரி. வழக்கு சொத்தின் மதிப்பு 1 கோடி வரை பெரும் என்பதால் இந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் பண ஆள்வரையறையை தாண்டியுள்ளதால் இந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

எனது நிருபண வாக்குமூலத்தின் படி வழக்கு சொத்து 3 சென்ட் 704 ச.லிங்ஸ் இருந்ததாகவும், தற்போது ஆக்கிரமிப்பு காரணத்தினால் அதன் பரப்பளவு 2 சென்ட் 684 ஆக குறைந்து விட்டதாக சொல்கிறேன் என்றால் சரி. யார் ஆக்கிரமிப்பு செய்தார் என்றால் அரசு பாதைக்காகவும், ரோட்டிற்காகவும் ஆர்ஜினம் செய்தது. அதற்கு நஷ்ட ஈடு பெற்றுள்ளோமா என்றால் இல்லை. பட்டிகை சொத்து எங்கள் குடும்பத்தில் தனி அனுபவத்தில் இல்லை என்றால் சரி. பட்டிகை சொத்தின் வடக்கு பக்கத்தில் ரோட்டிற்காக இடம் விட்டுகொடுத்ததாக எனது நிருபண வாக்குமூலத்தின் சொல்லிய விவரத்திற்கு விட்டுகொடுத்த அளவுகள், அதற்கான ஆவணங்கள் எதும் உள்ளதா என்றால் எனக்கு விட்டு கொடுத்த இடத்தின் அளவு தெரியாது. அதற்கான ஆவணங்கள் எதும் இல்லை.

பட்டிகை சொத்தின் ஒரு பகுதி கடைக்கு வாடகை கொடுத்ததாக சொல்வதற்கு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. எனது தாத்தா சுடலையாண்டி பாட்டி பிரம்மமாள் இருவரும் காலம் சென்ற பின்பு பட்டிகை சொத்தை பாகம்

செய்யவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தற்போது வரை பட்டிகை சொத்து தாத்தா பெயரில் உள்ளது. 1ம் பிரதி அவரது பாகத்தை குறித்து 2 முதல் 4 பிரதிகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் பாகம் பிரிக்கவில்லை பிரிக்காமல் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதியுள்ளார்.

5 ம் பிரதி அவரது மனைவியின் பாகத்தை பொறுத்து 6 முதல் 8 பிரதிகளுக்கு அவரது மனைவியின் பாகத்தில் விடுதலை எழுதிக்கொடுக்க ஆவணம் எற்படுத்தியுள்ளார் என்றால் சரிதான். இறந்து போன சங்கரம்மாள் அவரது கணவரான 9 ம் பிரதி சங்கரம்மாளின் பாகத்தை பொறுத்து 10 முதல் 12 பிரதிகளுக்கு விடுதலை ஆவணம் எற்படுத்தியுள்ளார் என்றால் சரி. 1ம் பிரதி, 5 ம் பிரதி,9 ம் பிரதிஅவர்களது பாகத்தை பொறுத்து ஏற்படுத்திய செட்டில்மெண்ட் ஆவணம், விடுதலை ஆவணங்கள் நிலைக்கத்தக்கது என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

எனது பிராது மனுவின் எனது அப்பவிற்கு அவருடன் பிறந்த சகோதரிகளுக்கும் உரிமை இருப்பதாக ஒப்பு கொண்டுள்ளதால் பிரதிகள் ஏற்படுத்திய ஆவணங்கள் செல்லத்தக்கது என்றால் சரியல்ல. கூட்டு பங்குதாரர்களிடம் பாகபிரிவினை பரிகாரம் கோராமல் இந்த வழக்கில் கோரியுள்ள மற்ற பரிகாரங்கள் அனைத்தும் சட்டப்படி ஏற்புடையத்தல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு சட்டப்படி தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. பிரதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். பிரதிகளின் எதிர் வழக்குரைக்கு எந்த வித மறுப்பும் எனது நிருபண வாக்குமூலத்தின் தெரிவிக்காததால் பிரதிகளின் எதிர் வழக்குரை ஏற்புடைய ஒன்று என்றால் சரியல்ல. நிருபண வாக்குமூலத்தின் 6 வது பக்கத்தில் பாக பிரிவினை

செய்யவில்லை என்று நான் ஒப்பு கொண்டுள்ளதால் பாகபிரிவினை பரிகாரம் கோராத இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. கூட்டு சொத்தின் மீது தனி உரிமை கொண்டாடி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.